உ

கடவுள் துணை.

# தங்கரத்தினம் பொன்னுரத்தினம்

என்னும்

# கனகரத்தினப் பாட்டு.



இஃது

மதுரை, பள்ளத்தெரு,

K. பழனிச்சாமி பிள்ளையவர்களால்

---

மதுரை

விவேகானந்தா பிரஸில்,

பதிக்கப்பெற்றது.

---

ரைட்] 1930. [விலை அணா 2

O-, IMPP, T
N30
186086

உ

குமரன் துணை

முத்தமிழ் க்ஷேத்திரம்

## N. ராமலிங்கம் அவர்கள்

இயற்றிய

4 NOV 1930

## தங்கரத்தினம் பொன்னுரத்தினம்

என்னும்

# கனகரத்தினப்பாட்டு.



இஃது

மதுரை

## K. பழனிச்சாமி பிள்ளை அவர்களால்,

மதுரை

விவேகானந்தாபிரஸில்,

பதிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்] 1930 [விலை அணா 2.

தங்கரத்தினம் பொன்னுரத்தினம்

என்னும்

# கனகரத்தினப்பாட்டு.

## விநாயகர் காப்பு.

தங்கரெத்தினத்தோடொப்பத் தையலாம் பொன்னுரத்தினம்
பங்கமில் கனகரத்னப் பாட்டுரைத்திடவே நல்ல
திங்களைச்சென்னிமீது சேர்த்திடுஞ்சிவனுர் பெற்ற
ஐங்கரன் தூயபாதம் அனுதினங்காப்புதானே.

ஆனை யழைத்தவண்டி ஆறுமுகமானவண்டி
மானைத்தொடர்ந்தவண்டி தங்கரத்தினமே
மயிலேறுங் கந்தனடி பொன்னுரத்தினமே 1

கூடிக்குலாவியந்த குமரனோடுவாழ்ந்த தெல்லாம்
வேடிக்கையல்லவோடி கனகரத்தினமே
வெகுநாளைச்சொந்தமடி சிமிட்டுரத்தினமே 2

நீலமயில் வாகனனுல் நெஞ்சம் புண்ணச்சுதடி
பாலுங்கசந்ததேடி தங்கரத்தினமே
பசலையும்பூத்ததடி பொன்னுரத்தினமே 3

ஐந்துவயதினிலே அறியாப்பருவத்திலே
சொந்தமாய் வந்தேனடி கனகரத்தினமே
சொகுசாயிருந்தேனடி சிமிட்டுரத்தினமே 4

எட்டாப்பழமடியோ இன்பரசத்தேனடியோ
மட்டில்லாவேலனடி தங்கரத்தினமே
மருவும்விநோதனடி பொன்னுரத்தினமே 5

வள்ளி கொழுநன்பேரை வாயாரவாழ்த்திடவே
உள்ளமுருகுதடி கனகரத்தினமே
உவட்டமுடியாதடி சிமிட்டுரத்தினமே 6

181086

கன்னல் மதுர்மொழி கட்டழகனென் கனவன்
என்னைப்பொடி போட்டானடி தங்கரத்தினமே
இணைபிரியக்கூடுதில்லை பொன்னுரத்தினமே 7

சீவிமினுக்கிடுவேன் செந்தூரப்பொட்டிடுவேன்
மேவியிருந்திடுவேன் கனகரத்தினமே
விகற்பமொன்றில்லையடி சிமிட்டுரத்தினமே 8

அஞ்சியொடிங்கி நின்றேன் அழுதுசலித்துநின்றேன்
ரஞ்சிதனைக்காணமலே தங்கரத்தினமே
நாட்டமனங் கூடுதில்லை பொன்னுரத்தினமே 9

மாடுமனைவந்தாலென்ன மக்கள்சுற்றம் நொந்தா
[லென்ன
கோடிபொன் கிடைத்தாலென்ன கனகரத்தினமே
குறுநகைபோதுமடி சிமிட்டுரத்தினமே 10

உண்டாலிருக்கவைக்கும் ஊரிலுள்ள கள்சரக்கு
கொண்டால் முருகனடி தங்கரத்தினமே
குறைவில்லா பாக்யமடி பொன்னுரத்தினமே 11

கொஞ்சியிருப்பார்கள் குயில்மொழிமாதரெல்லாம்
அஞ்சியிருப்பேனடி கனகரத்தினமே
ஆறுமுகவேலன் வந்தால் சிமிட்டுரத்தினமே 12

வேறு

கானக்கரிசலிலே களையெடுக்கும் பெண்மயிலே
ஞானக்குற வஞ்சியே தங்கரத்தினமே
நம்பியேவந்தேனடி பொன்னுரத்தினமே 13

பட்டுக்கரை வேட்டிகட்டி பாலூத்திசாதங்கட்டி
மட்டுக்கொல்லை போகையிலே கனகரத்தினமே
மறந்தேனடி உன்னுசையை சிமிட்டுரத்தினமே 14

மானேமறந்தேனடி மயிலாடும் பாறையிலே
தேனேகைகண்டசுகம் தங்கரத்தினமே
திருமோகாலமெல்லாம் பொன்னுரத்தினமே 15

ஆலம்விழுதெடுத்து ஆக்காட்டுப் பித்தெடுத்து
கோரைக்கிழங்கெடுத்து கனகரத்தினமே
கூட்டுறவானேனடி சிமிட்டுரத்தினமே 16

கடகடென்று கல்லுருட்டி கனவாயிலே கூட்டமிட்டு
திடுதிடென மடைதிறக்கும் தங்கரத்தினமே 17
திட்டாந்திரம்சொல்லவேணும் பொன்னுரத்தினமே

மதுரைச்சிங்காரம்

மாமதுரைபோகவேனும் மல்லிகைப்பூவாங்கவேணும்
சோமதுரை சூடவேணும் கனகரத்தினமே
சொகுசாயிருக்கவேணும் சிமிட்டுரத்தினமே 18

கானமயிலே உன்னை கண்டால்பிரிவதில்லை
மீனாக்ஷி கோவிலிலே தங்கரத்தினமே
விபூதியள்ளித்தாரேன் பொன்னுரத்தினமே 19

ஆத்தோரம் ஊத்துதோண்டி ஆலங்கொம்பால்
[பல்விளக்கி
சேத்தூருபோகையிலே கனகரத்தினமே
செப்பினதும் மறந்தாயோடி சிமிட்டுரத்தினமே 20

தாதுவருஷத்திலே சார்ந்தத்தை மாதத்திலே
பாதுகாப்பில்லாமலே தங்கரத்தினமே
பதியைமறந்தாயோடி பொன்னுரத்தினமே 21

எலுமிச்சம்பழம்போல நாம் இருபேரும்ஒருவயது
நலமாயிருக்கையிலே கனகரத்தினமே
நாம்பிரியக்காலமோடி சிமிட்டுரத்தினமே 22

சொக்கேசர்சன்னதியாம் சுந்தரமீனாட்சியடி
பக்கம்வந்துபாரடி நீ தங்கரத்தினமே
பாக்கியம் பெறலாமடி பொன்னுரத்தினமே 23

இந்தியாவில்பேருபெற்ற என்ராம்பொடிக்கடையாம்
சுந்தரமே ஒருசிமிட்டா கனகரத்தினமே
அரிதமுடன்போட்டுப்பாரு சிமிட்டுரத்தினமே 24

சிச்சாகடைச்சந்தனமாம் சீனிநாய்க்கர்லேகியமாம்
இச்சையுடன் வாங்கிப்பூசி தங்கரத்தினமே
ஏறலாம் மோட்டார்வண்டி பொன்னுரத்தினமே 25

## நகரத்தார் நாட்டுச்சிங்காரம்

1,86086

போகுது காரைக்குடி புறப்படுதே மதுரைவிட்டு
ஏகுதே மோட்டார்வண்டி கனகரத்தினமே
ஏங்காதடி பெண்மயிலே சிமிட்டுரத்தினமே 26

ஏத்தமடி மேலூரு இறக்கமடி திருப்பத்தூரு
பார்த்தமடி குன்னக்குடி தங்கரத்தினமே
பண்டாரமுருகனடி பொன்னுரத்தினமே 27

பத்துநாள் திருவிழாவைப் பார்த்தால் பசியாதடி
சத்துள்ள செட்டிமார்கள் கனகரத்தினமே
சதா துதிப்பாரடி சிமிட்டுரத்தினமே 28

தங்கரதம்வெள்ளிரதம் சமைந்ததடி முருகனுக்கே
இங்கிறங்கிப்பார்ப்போமடி தங்கரத்தினமே
ஏறுமயில் வேலனையே பொன்னுரத்தினமே 29

ஏறுவோம் மலைமேலே    எத்தமுள்ளமுருகனிடம்
கூறுவோம் குறையையெல்லாம்    கனகரத்தினமே
கும்பிடுவோம்கையெடுத்து    சிமிட்டுரத்தினமே 30

கேட்டவரங்கொடுப்பான்    செம்பீரமுருகனடி
வாட்டமில்லாமலே நாம்    தங்கரத்தினமே
வாழ்ந்துவருவோமடி    பொன்னுரத்தினமே 31

வந்தோமடி காரைக்குடி    வண்ணமாடமாளிகையாம்
சுந்தரமே நீபாரடி    கனகரத்தினமே
சோலைக்குயிலேவாடி    சிமிட்டுரத்தினமே 32

கொண்டாடிப்போற்றுவார்கள்    கொப்புடையநாயகியை
கண்டாலேபோதுமடி    தங்கரத்தினமே
கலியெல்லாம் தீருமடி    பொன்னுரத்தினமே 33

ஏறுவோம் மோட்டார்வண்டி    இறங்குவோம்தேவ [கோட்டை
ஆறுவோம்பசியுமடி    கனகரத்தினமே
அண்ணுசாமிகாப்பிஓட்டல்    சிமிட்டுரத்தினமே 34

பேரோங்குந்தேவகோட்டை    பெருமாளின்கோயிலுந் [தான்
சீரோங்குஞ்சன்னதியாம்    தங்கரத்தினமே
சேவிப்போமிருபேரும்    பொன்னுரத்தினமே 35

சுற்றிவருவோமடி    தூண்டாமணிவிளக்கே
பற்றியேவருவாயடி    கனகரத்தினமே
பாங்கான நகர்வலமே    சிமிட்டுரத்தினமே 36

போய்வருவோமதுரைக்கோட்டை    புறப்படுதேமோட் [டார்வண்டி
மாயமாய்ப்பறக்குதடி    தங்கரத்தினமே
மாருட்டமாகுதடி    பொன்னுரத்தினமே 37

சடசடெனமழைவருதே    சாயங்காலநேரமடி
திடுதிடெனவந்ததடி    கனகரத்தினமே
[illegible]ட்டமுடன்மாமதுரை    சிமிட்டுரத்தினமே 38

## சந்தோஷம் பாராட்டல்

வாழைப்பழமேயடி வலதுகையில் சர்க்கரையே
தாழைக்கனியதனைத் தங்கரத்தினமே
தந்திட்டால்போதுமடி பொன்னுரத்தினமே 39

ஊரெல்லாம்புளியமரம் உலுப்பிடவேசலசலங்கும்
ஏறி நான் பறித்திடவே கனகரத்தினமே
எக்காலங்கிட்டுமோடி சிமிட்டுரத்தினமே 40

கண்ணத்தாள்கோவிலுக்கே கடுகனவேபோய்
[வருவோம்
வண்ணச்சீர்பட்டுடுத்தி தங்கரத்தினமே
வலதுபுறம்கூந்தல்போடு பொன்னுரத்தின

வாசமுள்ளரோஜாப்பு வகையாக நீ முடித்து
நேசமுள்ளபொட்டுவைத்து கனகரத்தினமே
நின்றாலேபோதுமடி சிமிட்டுரத்தினமே 42

காலைப்பருவமடி கண்ணுட்டிபெண்மயிலே
நாளைக்குறித்தோமடி தங்கரத்தினமே
நலமாகநீயிருப்பாய் பொன்னுரத்தினமே 43

ஒட்டாரஞ்செய்யவேண்டாம் உன்பிரியமேகுமடி
கட்டாயம் நான்வருவேன் கனகரத்தினமே
கண்விழித்துப்பார்த்திருப்பாய் சிமிட்டுரத்தினமே 44

தண்டைகிலகிலென சரப்பளிமினுமினென்ன
அண்டையிலே நீயிருந்தால் தங்கரத்தினமே
ஆதாரமாகுமடி பொன்னுரத்தினமே 45

பச்சைவண்டிபவளவண்டி பர்மாவெள்ளைக்காரவண்டி
மிச்சானகிளியன்துரை கனகரத்தினமே
மேட்டிமையாயோட்டுராரே சிமிட்டுரத்தினமே 46

வெள்ளியுதயமாச்சு விடியற்காலநேரமாச்சு
பள்ளிக்குப்போகவேணும் தங்கரத்தினமே
பதுங்கியிருப்பாயடி பொன்னுரத்தினமே 47

மானிருக்கும்மதுரையிலே மயிலிருக்கும்மணிநகரம்
தேனிருக்குங்கூந்தலிலே கனகரத்தினமே
செப்பாயோவாய்திறந்து சிமிட்டுரத்தினமே 48

அஞ்சறைப்பெட்டிக்குள்ளே அழகானதங்கப்பொம்மை
கொஞ்சிவிளையாடிடவே தங்கரத்தினமே
கூட்டிவருவாயடி பொன்னுரத்தினமே 49

தென்னங்குருத்தடியோ தித்திக்கும்பூவடியோ
சன்னல்போலேயிருக்கும் கனகரத்தினமே
...டவேணுமடி சிமிட்டுரத்தினமே 50

தாமரைக்கைதனிலே சலசலங்கும்பொன்வளையல்
பூமானைக்காணமலே தங்கரத்தினமே
புலம்புதடிவாய்திறந்து பொன்னுரத்தினமே 51

பூணாரம்பூட்டடியோ பொங்கலுக்குப்போகவேணும்
கோணமல்வருவாயானல் கனகரத்தினமே
கூட்டிப்போவேன்மனங்குளிர சிமிட்டுரத்தினமே 52

ஏரோப்ளான்வருகுதடி இரண்டாவதுபாகத்திலே
பாரோர்மகிழ்ந்திடவே தங்கரத்தினமே
பண்பாகப்பேசுமடி பொன்னுரத்தினமே 53

பாடினல்வாய்மணக்கும் பாங்காக நீபடித்தால்
சூடினல்பூமணக்கும் கனகரத்தினமே
சுயநலந்தேடுமடி சிமிட்டுரத்தினமே 54

எண்ணுதுமெண்ணிமனம் ஏழைமதியாகாமலே
கண்ணனகடவுளடி தங்கரத்தினமே
கருத்தினிலே நீவசிப்பாய் பொன்னுரத்தினமே 55

முற்றிற்று.

உ

சிவமயம்.

# புஸ்தக விளம்பரம்.

| | |
|---|---|
| கனகரத்தின பாட்டு | 0—1—0 |
| தசாவதாரம் | 0—1—0 |
| காவடிச்சிந்து | 0—1—0 |
| ஏரோபிளான் | 0—1—0 |
| இன்பரச தென்பாங்கு | 0—1—0 |
| காந்தி பாட்டு | 0—1—0 |
| நவரெத்தின ஒப்பாரி | 0—1—0 |
| சந்தனத்தேவன் தென்பாங்கு | 0—1—0 |
| ஜீவரத்தினம் | 0—1—0 |
| ஆண்பெண் தாலாட்டு | 0—1—0 |
| வள்ளிமுளைப்பாட்டு | 0—1—0 |
| அதிநூதன பஜனை | 0—1—0 |
| நடராஜபத்து | 0—1—0 |
| பழனிவடிவேலன்பாட்டு | 0—1—0 |
| கிளிக்கண்ணி | 0—1—0 |
| மூடமதிதிரவுகோல் | 0—1—0 |
| வீரகோபாலன் கும்மி | 0—1—0 |
| விநோத விடிகதை | 0—1—0 |
| பர்மாநொண்டி சிந்து | 0—1—0 |
| ருதுநூல்சாஸ்திரம் | 0—1—0 |
| ஆண்டிபண்டாரம் | 0—1—0 |
| வளையற் சிந்து | 0—1—0 |
| பரயன் பாட்டு | 0—1—0 |
| கலியூக சமாதனம் | 0—1—0 |
| குகைதிருடன் பாட்டு | 0—1—0 |
| சொக்கர் தியானம் | 0—1—0 |
| ஆண்டாள் பதிகம் | 0 |
| கலியூக சிந்து | -0 |
| மெஞ்ஞான தங்கம் | -0 |
| வள்ளி சுப்ரமணியர் தர்க்கம் | -0 |
| ஷை 2ம் பாகம் | 1—0 |
| அழுகினிகுதம்பை தர் பா | —1—0 |
| மதராஸ் தூக்கு | 0—1—0 |
| மாமி கொடு | 0—1—0 |
| வள்ளி தெய் ல் | 0—1—0 |
| குடியர் சிந் | 0—1—0 |
| கலியாண | 0—1—0 |
| பாம்பாட்டிசித்தர்பாடல் | 0—1—0 |
| தேயிலைதோட்டபாட்டு | 0—1—0 |
| கருப்புதோட்டபாட்டு | 0—1—0 |
| வேசை விலக்கல் | 0—1—0 |
| மைனர் பாட்டு | 0—1—0 |
| தங்கரத்னம் தேயிலை பாட்டு | 0—1—0 |
| மோட்டார் ஒப்பாரி | 0—1—0 |
| பெண்கள் ஒப்பாரி | 0—1—0 |
| நலுங்கு பாட்டு | 0—1—0 |
| தங்கம்தயிலால் பாட்டு | 0—1—0 |
| மயிர்பிடி சண்டை | 0—1—0 |
| சோடச திருப்புகழ் | 0—1—0 |
| செஞ்சிதிருடன் பாட்டு | 0—1—0 |


எமது விலாசம்,

எஸ். வேணுகோபால் நாயுடு,

புக்ஷாப் & பைண்டிங் ஆபீஸ்,

புதுமண்டபம், மதுரை.